# காஞ்சிபுரம் மாநகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2021–2022

# காஞ்சிபுரம் மாநகராட்சி
# 2021–2022–ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## 1. பணி அமைப்பும் தன்மையும் :–

காஞ்சிபுரம் பழைமையும் பெருமையும் வரலாற்றுச் சிறப்பும், புனிதத் தன்மையும் கொண்ட பல கோயில்கள் அமைந்த ஒரு யாத்திரை நகரமாகும். இந்நகர், உயர்ந்த வேலைப்பாடுகள் அமைந்த பட்டுத் துணிகளுக்கு உலகப்புகழ் பெற்றது. இந்நகராட்சி 01.11.1866–ல் தோற்றுவிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.651 நாள்.09.05.1993–ல் தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது, தற்போது அரசாணை எண்.238, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.12.2008–ல் சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.14.01.2011–ன்படி காஞ்சிபுரம் நகராட்சியுடன் அருகாமையில் உள்ள செவிலிமேடு பேரூராட்சி, தேனம்பாக்கம், ஓரிக்கை மற்றும் நத்தப்பேட்டை ஊராட்சிகள் எல்லை விரிவாக்கத்தின்போது சேர்க்கப்பட்டது. எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பின்பு காஞ்சிபுரம் நகராட்சியின் பரப்பளவு 36.14 சதுர கிலோ மீட்டராகும். தற்போது நகராட்சி 51 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தமிழ்நாடு அவசர சட்டம் எண்.02 நாள்.20.10.2021 அரசிதழ் எண்.494, நாள்.21.10.2021–ன்படி காஞ்சிபுரம் பெருநகராட்சியினை 21.10.2021 முதல் காஞ்சிபுரம் மாநகரட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் காஞ்சிபுரம் மாநகராட்சியில் 51 வார்டுகளை கீழ்கண்டவாறு 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு மாநகர் மன்ற தீர்மானம் எண்.162, நாள்.09.11.2021–இல் மன்ற அனுமதி பெறப்பட்டு, தமிழ்நாடு அரசிதழ் எண்.590, நாள்.14.12.2021 –இல் வெளியிடப்பட்டுள்ளது.

| வ.எண் | மண்டலம் | வார்டுகள் |
|---|---|---|
| 1 | மண்டலம் – 1 | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 16, 17 & 18 |
| 2 | மண்டலம் – 2 | 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30 & 34 |
| 3 | மண்டலம் – 3 | 31, 32, 33, 35, 36, 45, 46, 47, 48, 49, 50 & 51 |
| 4 | மண்டலம் – 4 | 11, 12, 13, 14, 15, 37, 38, 39, 40, 41, 42, 43 & 44 |

### 1.1 ஆட்சி எல்லை :–

இந்நகராட்சி பரப்பளவு 36.14 சதுர கிலோ மீட்டர்கள் ஆகும். இந்நகராட்சியின் எல்லையில் அறிக்கை ஆண்டில் யாதொரு மாறுதலும் செய்யப்படவில்லை.

2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகராட்சி மக்கள் தொகை 234353 ஆகும்.

## 2. <u>தனி அலுவலர் நியமனம்</u>:–

அரசாணை (பல்வகை) எண்.146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.24.10.2016–ல் தனி அலுவலர் நியமனம் செய்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி அறிக்கையாண்டில் திருமதி.ரா. மகேஸ்வரி, பி.காம். அவர்கள் 01.04.2021 முதல் 13.07.2021 வரை, திருமதி.சா. லெட்சுமி, எம்.காம்., ஆணையாளர் அவர்கள் 14.07.2021 முதல் 20.11.2021 வரை மற்றும் திரு.பா. நாராயணன், இணை இயக்குநர் / ஆணையர் 21.11.2021 முதல் 27.01.2022 வரை ஆணையர்கள் தனி அலுவலர்களாக பதவி வகித்து வந்தார்கள்.

### அ. <u>நகரமன்ற கூட்டங்கள்</u> :–

தனி அலுவலர் தலைமையில் 01.04.2021 முதல் 25.01.2022 வரை அறிக்கையாண்டில் 11 சாதாரணக் கூட்டங்கள், 5 அவசரக் கூட்டங்கள் மற்றும் 2 சிறப்பு கூட்டங்கள் ஆக மொத்தம் 18 கூட்டங்கள் நடைபெற்றது. இக்கூட்டங்களில் முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை 396 ஆகும்.

### ஆ. <u>நியமனக்குழு கூட்டங்கள்</u>:–

அறிக்கையாண்டில் தனி அலுவலர் அவர்கள் தலைமையில் இரண்டு நியமனக்குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு, இதில் கருணை அடிப்படையிலான நியமனத்தின்கீழ் தூய்மை பணியாளர்கள் பணி நியமனம் – 3, வருவாய் உதவியாளர் பணி நியமனம் – 1 மற்றும் காவலர் பணி நியமனம் – 1 ஆக மொத்தம் 5 பணி நியமனங்கள் செய்யப்பட்டுள்ளது.

### இ) <u>அறிக்கையாண்டில் பணியாற்றிய ஆணையர்கள் விவரம்</u> :–

| வ.எண் | நகராட்சி ஆணையாளர் பெயர் | முதல் | வரை |
|---|---|---|---|
| 1 | திருமதி. ரா. மகேஸ்வரி, ஆணையாளர் | 01.04.2021 | 13.07.2021 |
| 2 | திருமதி சா.லெட்சுமி, எம்.காம், ஆணையாளர் | 14..07.2021 | 20.11.2021 |
| 3 | திரு. பா. நாராயணன், இணை இயக்குநர்/ஆணையர் | 21.11.2021 | 31.03.2022 |

### ஈ) <u>மேலாட்சி</u> :–

அறிக்கையாண்டில் மாநகராட்சி, பணியாளர்களின் சம்பள செலவு ரூ.3015.54 இலட்சம் ஆகும்.

அலுவலர்களையும், பணியாளர்களையும் பணி அமர்த்தல், தண்டித்தல் ஆகியவை பற்றிய பணிவிதிகள் வழுவாமல் கடைபிடிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது.

## 3) <u>நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் – 2022</u> :–

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான நேரடி தேர்தல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் 28.01.2022 அன்று அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து காஞ்சிபுரம் மாநகராட்சிக்கான 51 மாமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பதற்கான நேரடி தேர்தல் 19.02.2022 அன்று நடைபெற்றது. 36 வது வார்டு மாமன்ற உறுப்பினர் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் தேர்தல் நடைபெறுவதற்க முன்னர் இறந்துவிட்டதால் அந்த வார்டுக்கு மட்டும் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. எஞ்சியுள்ள 50 வார்டுகளுக்கான தேர்தலில் வெற்றி பெற்ற மாமன்ற உறுப்பினர்களுக்கான முதல் கூட்டம் மற்றும் பதவியேற்பு 02.03.2022 அன்று நடத்தப்பட்டது.

அ) **<u>தேர்வு செய்யப்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் விவரம்</u>**

| வ.எண் | மாமன்ற உறுப்பினர்கள் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | திருமதி.சா. அஸ்மா பேகம் | 1 |
| 2 | திருமதி.சே. விமலாதேவி | 2 |
| 3 | திருமதி.ஜி. ஜோதிலட்சுமி | 3 |
| 4 | திருமதி.பி. நிர்மலா | 4 |
| 5 | திருமதி.எஸ். இலக்கியா | 5 |
| 6 | திருமதி.கு. பிரியா குழந்தைவேலு | 6 |
| 7 | திருமதி.ரா. சித்ரா | 7 |
| 8 | திருமதி.சோ. சூரியா சோபன்குமார் டாக்டர் | 8 |
| 9 | திருமதி.மூ. மகாலட்சுமி | 9 |
| 10 | திருமதி.ச. சரஸ்வதி | 10 |
| 11 | திரு.கோ. சண்முகானந்தம் | 11 |
| 12 | திரு.மோ. தேவராஜன் | 12 |
| 13 | திருமதி.பா. சரஸ்வதி | 13 |
| 14 | திரு.கி. குமரவேல் | 14 |
| 15 | திருமதி.ச. மௌலி | 15 |
| 16 | திருமதி.து. சாந்தி துரைராஜன் | 16 |
| 17 | திருமதி.ஜி. சசிகலா | 17 |
| 18 | திருமதி.ரா. மல்லிகா | 18 |
| 19 | திருமதி.ச. கௌதமி | 19 |
| 20 | திருமதி.தே. அகிலா | 20 |
| 21 | திருமதி.எல். விஜிதா | 21 |
| 22 | திரு.ர. குமரகுருநாதன் | 22 |
| 23 | திருமதி.மா. புனிதா | 23 |
| 24 | திருமதி.ச. சர்மிளா | 24 |
| 25 | திரு.சு. சந்துரு | 25 |
| 26 | திரு.அ. சரவணன் | 26 |
| 27 | திருமதி.வே. ஷாலினி | 27 |
| 28 | திரு.வ. கமலக்கண்ணன் | 28 |
| 29 | திரு.கு குமரன் | 29 |
| 30 | திரு.ப. சுரேஷ் | 30 |
| 31 | திருமதி.வி. சுந்தரி | 31 |
| 32 | திருமதி.சீ. சாந்தி | 32 |
| 33 | திருமதி.க. சோபனா | 33 |
| 34 | திரு.சு.பா. பிரவீன்குமார் | 34 |
| 35 | திருமதி.பொ. ரமணி | 35 |
| 36 | திரு.கே. வேலரசு | 37 |
| 37 | திருமதி.ச. சரளா | 38 |
| 38 | திரு.ச. அன்பழகன் | 39 |
| 39 | திருமதி.சி. பானுப்பிரியா சிலம்பரசு | 40 |
| 40 | திரு.சு. சிந்தன் | 41 |
| 41 | திருமதி.த. சூரியா | 42 |
| 42 | திரு.சு. செவிலிமேடு மோகன் | 43 |
| 43 | திரு.த. விஸ்வநாதன் | 44 |
| 44 | திருமதி.சே. சாந்தி | 45 |

| | | |
|---|---|---|
| 45 | திருமதி.ஆ. கயல்விழி | 46 |
| 46 | திரு.த. பிரேம்குமார் | 47 |
| 47 | திரு, ரா. கார்த்திக் | 48 |
| 48 | திருமதி.த. பூங்கொடி | 49 |
| 49 | திரு.மு. சங்கர் | 50 |
| 50 | திரு.ப. சங்கர் | 51 |

**ஆ) <u>மேயர் மற்றும் துணை மேயர்களுக்கான மறைமுக தேர்தல்</u> :–**

மாமன்ற மேயர் மற்றும் துணை மேயர் ஆகியோர்களை தேர்வு செய்வதற்கான மறைமுக தேர்தல் 04.03.2022 அன்று நடத்தப்பட்டது. இதில் 9–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.மூ. மகாலட்சுமி அவர்கள் மாமன்ற மேயராகவும் மற்றும் 22–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.ர.குமரகுருநாதன் அவர்கள் மாமன்ற துணை மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**இ) <u>மண்டல குழு தலைவர் தேர்தல்</u> :–**

தேர்ந்தெடுக்கப்பட்ட 50 வார்டு மாமன்ற உறுப்பினர்களில் மேயர், துணை மேயர் தவிர்த்து பிற மாமன்ற உறுப்பினர்களைக் கொண்டு இம்மாநகராட்சியின் நான்கு மண்டலங்களுக்கும் மண்டல குழு தலைவர்கள் தேர்ந்தெடுப்பதற்கான நேரடி தேர்தல் 30.03.2022 அன்று காலை நடைபெற்றது. அதில் பின்வருமாறு மண்டல குழு தலைவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| மண்டலம் எண் | மண்டல குழு தலைவர் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| I | திருமதி.G. சசிகலா | 17 |
| II | திரு.S. சந்துரு | 25 |
| III | திருமதி.S. சாந்தி | 32 |
| IV | திரு. செவிலிமேடு S. மோகன் | 43 |

**ஈ) <u>நிலைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்தல்</u> :–**

தேர்ந்தெடுக்கப்பட்ட 50 வார்டு மாமன்ற உறுப்பினர்களில் மேயர், துணை மேயர் மற்றும் மண்டல குழு தலைவர்களை தவிர்த்து பிற மாமன்ற உறுப்பினர்களைக் கொண்டு 6 நிலைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான நேரடி தேர்தல் 30.03.2022 அன்று மாலை நடைபெற்றது. அதில் பின்வருமாறு நிலைக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| நிலைக்குழு விவரம் | நிலைக்குழு உறுப்பினர்கள் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| கணக்கு (Accounts Committee) | திரு.D. பிரேம்குமார் | 47 |
| | திருமதி.S. சாந்தி | 45 |
| | திருமதி.R. சித்ரா | 7 |
| | திருமதி.S. சரஸ்வதி | 10 |
| | திருமதி.K. பிரியா குழந்தைவேலு | 6 |
| | திருமதி.A. கயல்விழி | 46 |

| | | |
|---|---|---|
| கல்வி (Education Committee) | திரு.K. குமரவேல் | 14 |
| | திரு.S. சிந்தன் | 41 |
| | திருமதி.S. இலக்கியா | 5 |
| | திருமதி.L. விஜிதா | 21 |
| | திருமதி.S. மௌலி | 15 |
| | திருமதி.D. சூரியா | 42 |
| பொது சுகாதாரம் (Public Health Committee) | திரு.P. சங்கர் | 51 |
| | திருமதி.S. சரளா | 38 |
| | திருமதி.S. அஸ்மா பேகம் | 1 |
| | திருமதி.M. புனிதா | 23 |
| | திருமதி.D. அகிலா | 20 |
| | திரு.K. குமரன் | 29 |
| வரி விதிப்பு, நிதி மற்றும் வரி மேல்முறையீடு அல்லாமல் (Taxation and Finance, Excluding Taxation Appeals Committee) | திரு.T. விஸ்வநாதன் | 44 |
| | திரு.M. சங்கர் | 50 |
| | திரு.G. சண்முகானந்தம் | 11 |
| | திருமதி.B. சரஸ்வதி | 13 |
| | திருமதி.S. பானுபிரியா சிலம்பரசு | 40 |
| | திருமதி.V. சுந்தரி | 31 |
| நகர திட்டமிடல் மற்றும் மேம்பாடு (Town Planning and Improvement Committee) | திரு.K. வேலரசு | 37 |
| | திரு.M. தேவராஜன் | 12 |
| | திரு.A. சரவணன் | 26 |
| | திருமதி.K. சோபனா | 33 |
| | திருமதி.D. பூங்கொடி | 49 |
| | திருமதி.P. ரமணி | 35 |
| பணிகள் (Works Committee) | திரு.P. சுரேஷ் | 30 |
| | திரு.R. கார்த்திக் | 48 |
| | திரு.S. அன்பழகன் | 39 |
| | திருமதி.S. கௌதமி | 19 |
| | திருமதி.S. ஷர்மிளா | 24 |
| | திருமதி.G. ஜோதிலட்சுமி | 3 |

**உ) <u>நியமனக் குழு உறுப்பினர் தேர்தல்</u> :–**

தேர்ந்தெடுக்கப்பட்ட 50 வார்டு மாமன்ற உறுப்பினர்களில் மேயர், துணை மேயர், மண்டல குழு தலைவர்கள் மற்றும் நிலைக்குழு உறுப்பினர்களைத் தவிர்த்து பிற மாமன்ற உறுப்பினர்களைக் கொண்டு நியமனக் குழு உறுப்பினர் தேர்ந்தெடுப்பதற்கான நேரடி தேர்தல் 31.03.2022 அன்று காலை நடைபெற்றது. அதில் 4–வது வார்டு மாமன்ற உறுப்பினர் **திருமதி.P. நிர்மலா** அவர்கள் நியமனக்குழு உறுப்பினராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**ஊ) <u>நிலைக் குழுக்களுக்கான தலைவர்கள் தேர்தல்</u> :–**

தேர்ந்தெடுக்கப்பட்ட 36 நிலைக் குழு உறுப்பினர்களைக் கொண்டு நிலைக் குழுக்களுக்கான தலைவர்களை தேர்ந்தெடுப்பதற்கான நேரடி தேர்தல் 31.03.2022 அன்று மாலை நடைபெற்றது. அதில் பின்வருமாறு நிலைக்குழு தலைவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| நிலைக்குழு விவரம் | நிலைக் குழு தலைவர்கள் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| கணக்கு (Accounts Committee) | திருமதி.R. சித்ரா | 7 |
| கல்வி (Education Committee) | திருமதி.S. இலக்கியா | 5 |
| பொது சுகாதாரம் (Public Health Committee) | திரு.P. சங்கர் | 51 |
| வரி விதிப்பு, நிதி மற்றும் வரி மேல்முறையீடு அல்லாமல் (Taxation and Finance, Excluding Taxation Appeals Committee) | திரு.T. விஸ்வநாதன் | 44 |
| நகர திட்டமிடல் மற்றும் மேம்பாடு (Town Planning and Improvement Committee) | திருமதி.D. பூங்கொடி | 49 |
| பணிகள் (Works Committee) | திரு.P. சுரேஷ் | 30 |

**இடைத்தேர்தல் :–**

36–வது வார்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட மாமன்ற உறுப்பினருக்கான தேர்தல் 09.07.2022 அன்று நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 12.07.2022 அன்று நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையில் திரு.கு. சுப்புராயன் அவர்கள் 36–வது வார்டு மாமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றார்.

**4) பொறியியல் பிரிவு :–**

**அறிக்கையாண்டில் பணியாற்றிய மாநகராட்சி பொறியாளர்கள் விவரம் :-**

| வ.எண் | நகராட்சி பொறியாளர் பெயர் | முதல் | வரை |
|---|---|---|---|
| 1 | திரு.கோ. ஆனந்தஜோதி | 01.04.2021 | 16.08.2021 |
| 2 | திரு. B. சரவணன், உதவி பொறியாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் (பொ.) | 17.08.2021 | 18.08.2021 |
| 3 | திரு.ரெ. கணேசன் | 19.08.2021 | 31.03.2022 |

பொறியியல் பிரிவு அலுவலர்களுக்கு இவ்வாண்டுக்கு ஆன செலவு ரூ.314.51 இலட்சம் சென்ற ஆண்டு ரூ.350.02 இலட்சம் ஆகும்.

**5) குடிநீர் விநியோகம் குறித்த அறிக்கை :-**

காஞ்சிபுரம் மாநகராட்சியானது 25.10.2011 முதல் செவிலிமேடு பேரூராட்சி, ஓரிக்கை, தேனம்பாக்கம் மற்றும் நத்தப்பேட்டை ஆகிய கிராம ஊராட்சிகளையும் இணைத்து 36.14 சதுர கி.மீ. பரப்பளவும், 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 234353 மக்கள் தொகை கொண்ட 51 வார்டுகளை உள்ளடக்கிய மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தற்போதைய மக்கள் தொகை 2,76,360 ஆகும். காஞ்சிபுரம் நகரம் மாவட்ட தலைநகரமாக இருப்பதுடன் பிரசித்தி பெற்ற திருக்கோயில்கள் அதிகமுள்ள கோயில் நகரமாகவும், பட்டு தொழிலுக்கு பிரசித்தி பெற்ற நகரமாகவும் சுற்றுலா தலமாகவும் இருந்து வருகிறது.

காஞ்சிபுரம் நகரில் குடிநீர் விநியோகத்திற்காக பாலாற்று படுகையில் ஓரிக்கை என்ற இடத்திலும், திருப்பாற்கடல் என்ற இடத்திலும் இரண்டு குடிநீர் தலைமை நீரேற்று நிலையங்கள் அமைக்கப்பட்டு நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. இவைகள் முறையே 1961 மற்றும் 1992 வருடம் முதல் செயல்பட்டு வருகிறது. இவைகள் மூலமாக தினமும் சராசரியாக சாதாரண காலங்களில் 20.75 மில்லியன் லிட்டர்கள் குடிநீரும், கோடை காலங்களில் 19.00 மில்லியன் லிட்டர்கள் குடிநீரும் எடுக்கப்பட்டு பொது மக்களுக்கு தினமும் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு முறையே 96 லிட்டர்கள் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நகரில் இதுவரை 33104 குடிநீர் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் மாநகராட்சி மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்தவும் அரசு நிர்ணயிக்கப்பட்ட குடிநீர் அளவான நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 135 லிட்டர்கள் என்ற இலக்கினை செயல்படுத்த வேண்டியும் அரசு நிதி உதவியுடன் " குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை" செயல்படுத்துவதற்குன்டான விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடு தயார் செய்ய வேண்டி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொது மக்களின் குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்காக 150 எண்ணிக்கை இந்தியா மார்க் II ஆழ்துளை குழாய் கிணறு கைப்பம்புகளையும், 350 எண்ணிக்கை சிறு மின்விசை மோட்டார் பம்புகளையும் நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

## 6) <u>சாலைகள் குறித்த விவரம்</u> :-

இம்மாநகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான சாலைகளின் மொத்த நீளம் 380.00 கி.மீ. நகராட்சியின் ஊடே செல்லும் மாநில நெடுஞ்சாலை மற்றும் கிராமச்சாலை துறைக்கு சொந்தமான சாலையின் நீளம் 15.50 கி.மீ. ஆகும். நகராட்சியில் 51 வார்டுகளில் 2684 தெருக்கள் உள்ளது. இத்தெருக்களில் சிமெண்ட் சாலைகள் 103.20 கி.மீ., தார்சாலைகள் 162.92 கி.மீ. சரளைக்கல் சாலைகள் 1.61 கி.மீ. மற்றும் மண் சாலைகள் 23.10 கி.மீ. ஆகவும் உள்ளது.

## 7) <u>தெரு விளக்குகள்</u> :-

09-06-89ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை அரசு ஆணை எண்.344ல் உத்தரவுப்படியும், நகராட்சி நிர்வாகம் ஆணையர், சென்னை அவர்களின் 27-06-1989ம் தேதிய ந.க.48665/H1 எண்ணிட்ட உத்தரவுபடியும், நகராட்சி எல்லைக்குள் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்கும் பொறுப்பை நகராட்சியே நிர்வகிக்க வேண்டும் என உத்தரவிட்டதற்கு இணங்க மின்சார இலாகாவினரிடமிருந்து மின்விளக்குகள் 15-09-1990 முதல் பராமரிக்கும் பொறுப்பு மேற்கொள்ளப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

1989 முதல் நகராட்சி பணியாளர்களைக் கொண்டு தெருவிளக்குகள் பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணி செய்யப்பட்டு வருகிறது. தற்போதுள்ள தெரு விளக்குகளில் மொத்த எண்ணிக்கை 11728 ஆகும். இவற்றில் 24 விழுக்காடு தெருவிளக்குகளுக்கு ஆற்றல் சேமிப்பு அடிப்படையில் தானியங்கி நிறுத்தும் பொத்தான் அமைக்கப்பட்டுள்ளது.

பிரதான சாலைகளில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இவை நகரில் மொத்த விளக்குகளின் விகிதாச்சார அடிப்படையில் 19 சதவீதமாகும். 60 சதவீதம் குழல் விளக்குகளும் உள்ளது. 42 இடங்களில் உயர் கோபுர விளக்குகளும் முக்கிய இடங்களில் அமைக்கப்பட்டு உள்ளது. இவை நாள்தோறும் வந்துபோகும் மக்கள் பயன் அடையும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

2012-ம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிப்பு செய்யப்பட்ட சிறப்பு திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட முக்கிய பிரதான கோயில் பகுதிகள், பேருந்து போக்குவரத்து சாலைகள் மற்றும் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளின் முக்கிய சாலைகளில் 1789 எண்ணிக்கை மின்னாற்றல் சேமிப்பு விளக்குகள் ரூ.1606.70 லட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு அரசாணை எண்.580, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.21.11.2013-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

**நகராட்சியால் பராமரிக்கப்படும் மின்விளக்குகளின் எண்ணிக்கை 2021–22**

| | | | |
|---|---|---|---|
| 1 | சோடியம் மின்விளக்குகள் | – | 2273 |
| 2 | குழல் விளக்குகள் | – | 6090 |
| 3 | உயர்மின் கோபுர கொத்து விளக்கு (42 Nos.) | – | 325 |
| 4 | CFL விளக்குகள் | – | 2020 |
| 5 | LED விளக்குகள் | – | 1020 |
| | **மொத்தம்** | **–** | **11728** |

## 8) திட்டப் பணிகள் விவரம் :–

### 8.1 தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP) 2020-21 :–

மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP) 2020–21 –ன்கீழ் மாநில அரசின் பங்குத் தொகையாக (TURIP) ரூ.487.13 இலட்சம் மற்றும் நகராட்சியின் பங்குத் தொகை ரூ.162.37 இலட்சம் ஆக மொத்தம் ரூ.649.50 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.200.00 இலட்சம் வீதம் 4 சிப்பங்களாக தார் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதில் 4 சிப்பங்களுக்கான பணிகளும் முடிவுற்று மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

### 8.2 சிறப்பு சாலை மேம்பாட்டு திட்டம் (SRP) 2020-21 :–

மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் சிறப்பு சாலை மேம்பாட்டு திட்டம் (SRP) 2020–21 –ன்கீழ் மாநில அரசின் பங்குத் தொகையாக (SRP) ரூ.553.00 இலட்சம் மற்றும் நகராட்சியின் பங்குத் தொகை ரூ.97.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.650.00 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.200.00 இலட்சம் வீதம் 4 சிப்பங்களாகவும் மற்றும் ரூ. 50.00 இலட்சம் வீதம் ஒரு சிப்பமாகவும் தார் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதில் 4 சிப்பங்களுக்கான பணிகளும் முடிவுற்று மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

### 8.3 தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM- Special Shelter) 2017–18 :–

| வ. எண் | வேலையின் பெயர்கள் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இராஜாஜி மார்கெட் பகுதியில் வீடற்றவர்களுக்கு தங்குவதற்கான கட்டிடம் கட்டுதல். | 90.00 |

மேற்படி பணிக்கு 28.01.2021 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி முடியும் தருவாயில் வருகிறது.

### 8.4 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020–21 :–

2020–21–ம் ஆண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.162.06 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்குறிப்பிட்ட 10 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்று பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர்கள் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.45, அப்பாவு நகரில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 15.00 |
| 2 | வார்டு எண்.45, வடிவேல்நகரில் புதிய நூலக கட்டிடம் கட்டுதல் | 9.50 |
| 3 | வார்டு எண்.45, தாயார் குளம் பகுதியில் புதிய நியாயவிலைக்கடை அமைத்தல் | 13.50 |
| 4 | வார்டு எண்.21, அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் பயணிகள் நிழல் கூடம் அமைத்தல் | 44.86 |
| 5 | வார்டு எண்.30,அண்ணா பூங்காவில் உடற்பயிற்ச்சி கூடம் அமைத்தல் | 25.00 |
| 6 | வார்டு எண்.38, யாகசாலை மண்டபம் பகுதியில் புதிய நியாயவிலைக்கடை அமைத்தல் | 13.50 |

| | | |
|---|---|---|
| 7 | வார்டு எண்.44, புண்ணிக்கோட்டீஸ்வரர் கோயில் தெருவில் ஆழ்துளைக் கிணற்றுடன் கூடிய சிறு மின் விசைப் பம்புகள் அமைத்தல் | 7.50 |
| 8 | வார்டு எண்.10, கிழக்கு இராஜ வீதியில் புதிய நியாயவிலைக்கடை அமைத்தல் | 13.50 |
| 9 | வார்டு எண்.14, திருவேங்கம்பன் தெருவில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 13.30 |
| 10 | வார்டு எண்.16, தயார்குளம் ரோடு மற்றும் வேகவதி ரோடு இணைப்பில் புதிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல் | 6.40 |
| | **மொத்தம்** | **162.06** |

**8.5 <u>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021–22</u> :–**

2021–22–ம் ஆண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.121.82 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்குறிப்பிட்ட 8 பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்கள்** | **மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | வார்டு எண்.51, அஞ்சூர் பகுதியில் புதிய நியாயவிலைக்கடை அமைத்தல் | 15.78 |
| 2 | வார்டு எண்.48, குமரேசன் நகரில் புதிய நியாயவிலைக்கடை அமைத்தல் | 15.78 |
| 3 | வார்டு எண்.49, சதாவரம் பகுதியில் புதிய நியாயவிலைக்கடை அமைத்தல் | 15.78 |
| 4 | வார்டு எண்.5, தாமல்வார் தெருவில் புதிய அங்கன்வாடி மையம் கட்டுதல் | 14.12 |
| 5 | வார்டு எண்.8, மேற்கு ராஜ வீதியில் புதிய அங்கன்வாடி மையம் கட்டுதல் | 14.12 |
| 6 | வார்டு எண்.17, காமாராஜர் தெருவில் பயணிகள் நிழல் கூடம் அமைத்தல் | 18.00 |
| 7 | வார்டு எண்.47, வெங்கடாபுரம் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் கட்டுதல் | 14.12 |
| 8 | வார்டு எண்.28, வேகவதி தெருவில் புதிய அங்கன்வாடி மையம் கட்டுதல் | 14.12 |
| | **மொத்தம்** | **121.82** |

**8.6 <u>பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021–22</u> :–**

2021–22–ம் ஆண்டிற்கு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.28.90 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் கீழ்குறிப்பிட்ட 4 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதில் 2 பணிகள் முடிவுற்று பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 2 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்கள்** | **மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழை வாயிலில் உயர் மின் கோபுர விளக்கு அமைத்தல். | 6.30 |
| 2 | தாலுாக்கா அலுவலக உட்புறத்தில் உயர் மின் கோபுர விளக்கு அமைத்தல். | 6.30 |
| 3 | பெரியார் நகர் சாலை சந்திப்பில் உயர் மின் கோபுர விளக்கு அமைத்தல். | 6.30 |
| 4 | பச்சையப்பன் ஆண்கள் கல்லூாரி பேருந்து நிழற்கூடம் அமைத்தல் | 10.00 |
| | **மொத்தம்** | **28.90** |

**8.7 <u>மாநில பேரிடர் மேலாண்மை – 2021–22</u> :–**

மாநில பேரிடர் மேலாண்மை 2021–ன்கீழ் (SDRF) ரூ.83.15 இலட்சங்கள் நிதி ஒதுக்கீட்டில் நகரின் முக்கிய பகுதிகளில் 52 தார் மற்றும் சிமெண்ட் சாலைகளுக்கு பேட்ச் அமைத்திடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் அனைத்தும் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## 8.8 15–வது நிதிக்கு (15th CFC) 2020–2021 :–

15–வது மத்திய நிதிக்குழு (15th CFC) மாண்யம், 2020–2021–ன் கீழ் குடிநீர், திடக்கழிவு மேலாண்மை மற்றும் தார்சாலை அமைத்தல் ரூ.742.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் 18 குடிநீர், குழாய்கள் பதித்தல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் தார்சாலை மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் நடைபெற்று வருகிறது.

## 8.9 15–வது நிதிக்கு (15th CFC) 2021–2022 :–

1) 15–வது மத்திய நிதிக்குழு (15th CFC) மாண்யம், 2021–2022–ன் கீழ் குடிநீர் குழாய்கள் பதித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை அமைத்தல் பணிகளுக்கு ரூ.622.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் 9 பணிகள் மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.
2) 15–வது மத்திய நிதிக்குழு (15th CFC) மாண்யம், 2021–2022–ன் கீழ் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல் பணிகளுக்கு ரூ.125.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் 5 ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

## 8.10 தூய்மை பாரத இயக்கம் 2018–19 :–

காஞ்சிபுரம் மாநகராட்சி நத்தப்பேட்டை உரக்கிடங்கு வளாகத்தில் சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்தி நிலத்தினை மீட்டெடுக்கும் (Bio Mining Process) பணி ரூ.699.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

## 8.11 தூய்மை பாரத இயக்கம் "2.O" 2021–22 :–

2021–22–ம் ஆண்டிற்கு துாய்மை பாரத இயக்கம் "2.O" 2021–22 திட்டத்தின்கீழ் ரூ.105.40 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்குறிப்பிட்ட 4 பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | வேலையின் பெயர்கள் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கைலாசநாதர் கோயில் தெருவில் பொதுக் கழிப்பிடம் கட்டுதல். | 36.28 |
| 2 | அன்னை சத்யா நகரில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல். | 24.96 |
| 3 | திருவீதிபள்ளம் எம்.ஜி. ஆர் நகரில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல். | 24.96 |
| 4 | காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 10 எண்ணிக்கையில் சிறுநீர் கழிப்பிடம் கட்டுதல். | 19.20 |
| | **மொத்தம்** | **105.40** |

## 8.12 மூலதன மத்திய நிதி (CGF) 2021–22 :–

மூலதன பெரு நிதியின் (CGF) 2021–22 கீழ் காஞ்சிபுரம் மாநகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் உள்ள 40 வார்டுகளில் கழிவு நீரை மிண்ணனு மூலமாக தொடர்ச்சியாக கண்காணித்தல் பணி ரூ.41.72 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

## 8.13 கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டம் 2021–22 :–

2021–22–ம் ஆண்டிற்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1362.50 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்குறிப்பிட்ட 4 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதில் இரண்டு பணகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 2 பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | வேலையின் பெயர்கள் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் மாநகராட்சியில் தார் சாலை அமைத்தல் | 337.50 |
| 2 | வார்டு எண். 49, சம்பந்தமூர்த்தி நகரில் பூங்கா மேம்பாடு செய்தல் | 75.00 |
| 3 | வார்டு எண். 23,சீனிவாசா மேல்நிலை பள்ளியில் நவீன படிப்பகம் கட்டுதல் | 250.00 |
| 4 | காஞ்சிபுரம் மாநகராட்சியில் இராஜாஜி மார்க்கெட் கட்டுதல் | 700.00 |
| | **மொத்தம்** | **1362.50** |

**8.14 <u>குடிநீர் வீட்டினைப்பு வழங்குதல் திட்டம் (Internal Plumbing Water Supply Scheme)</u> :–**

காஞ்சிபுரம் பெருநகராட்சியில் விடுப்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் UIDSSMT-REVOLVING FUND திட்டத்தின் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் நோக்குடன் வட்டியில்லா கடனாக ரூ.474.34 இலட்சமும், நகராட்சி நிதியில் ரூ.10.66 லட்சமும் ஆக மொத்தம் ரூ.485.00 இலட்சம் மதிப்பீட்டில் 14000 இணைப்புகள் வழங்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய வழி முறைகள் பின்பற்றி இதுவரை 7200 எண்ணம் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

**8.15 <u>புதை வடிகால் வீட்டினைப்பு வழங்குதல் திட்டம் (Internal Plumbing Under Ground Drainage Scheme)</u> :–**

காஞ்சிபுரம் பெருநகராட்சியில் புதை வடிகால் செயல்படும் 40–வார்டுகளில், உள்ள விடுப்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் புதை வடிகால் வீட்டிணைப்பு வழங்கும் பொருட்டு, ரூ.281.00 இலட்சம் மதிப்பீட்டில் 5261 இணைப்புகள் வழங்க விரிவான திட்ட அறிக்கை தயார்செய்யப்பட்டு தற்போது 5100 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது, மேலும் தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது .

**8.16 <u>காஞ்சிபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் அமைத்தல்</u> :–**

காஞ்சிபுரம் மாநகராட்சியில் தற்பொழுது இயங்கிவரும் பேருந்து நிலையமானது போதுமான வசதி இல்லாமல் பொதுமக்களின் நெரிசல் நிறைந்த பகுதியாக இருந்து வருகிறது. இந்நிலையில் நகராட்சி பகுதிக்கு மிகவும் அருகாமையில் உள்ள கீழ்க்கதிர்பூர் என்ற கிராமத்தில் 10 ஏக்கர் புஞ்சை அனாதீன இடத்தினைத் தேர்வு செய்து புதியதாக பேருந்து நிலையம் அமைக்க மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களால் 12.05.2018 ந் தேதிய ந.க.எண்.15609.2017/ஆ2 எண் உத்திரவில் முன் நுழைவு (Enter upon permission) அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

மேற்படி இடத்தில் புதியதாக பேருந்து நிலையம் அமைக்க 02.05.2018 ந் தேதிய நகர மன்றத் தீர்மானம் எண்.27–ன்படி அனுமதி பெற்று அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு அதன் பேரில் அரசானை (Ms) எண்.75 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (MA-IV) நாள்.24.07.2018 படி ரூ.38.09 கோடி மதிப்பீட்டில் தனியாரின் பங்களிப்புடன் (Under PPP Mode DBFOT Basis) புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அரசாணை (Ms) எண்.9 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-IV), நாள்.20.01.2020–ல் PPP Mode DBFOT Based முறையில் மேற்படி பேருந்து நிலையப் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

அதன்படி இப்பணிக்கு PPP Mode (DBFOT Basis) அடிப்படையில் ஒப்பந்ததாரர்களிடம் RFQ (Request for Qualification) பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி 30.01.2020 அன்று இந்து ஆங்கில நாளிதழ் மற்றும் மாலை முரசு தமிழ் நாளிதழ்களில் 09.04.2020–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு விளம்பரம் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**9) <u>சுகாதாரம் மற்றும் திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஒழித்தல் – திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழிக்கும் திட்டம் – தனி நபர் கழிப்பிடங்கள் கட்டுதல்</u> :–**

காஞ்சிபுரம் மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மொத்தம் **6926** வீடுகளில் கழிப்பறை வசதி இல்லை என கண்டறிந்து, அவற்றில் அனைத்து வீடுகளுக்கும் கழிப்பறை வசதி ஏற்படுத்தி தற்போது திறந்தவெளி மலம் கழித்தல் இல்லா மாநகராட்சியாக உள்ளது.

**<u>பொது விவரங்கள்</u> :**

| | | | |
|---|---|---|---|
| 1. | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | : | 234353 |
| 2. | தற்போதைய மக்கள் தொகை | : | 296907 (தோராயமாக) |
| 3. | மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை | : | 75,164 (தோராயமாக) |
| 4. | பரப்பளவு | : | 36.14 |
| 5. | மொத்த வார்டுகளின் எண்ணிக்கை | : | 51 |
| 6. | மொத்த தெருக்களின் எண்ணிக்கை | : | 1007 |
| 7. | நகராட்சி துப்புரவு பணியாளர்கள் | : | 132 |
| 8. | தனியார் துப்புரவு பணியாளர்கள் | : | 350 |
| 9. | திடக்கழிவு சேகரிக்கப்படும் இடத்தின் பரப்பளவு | : | 39.41 ஏக்கர் (நத்தப்பேட்டை கிராமம் சர்வே எண்.484 & 484 B) |
| **<u>முதல் நிலை சேகரிப்பு :</u>** | | | |
| 1. | பேட்டரி சைக்கிள் ரிக்ஷா(BOV) | : | 78 |
| 2. | ஆட்டோ (LCV) | : | 16 |
| 3. | டிராக்டர் | : | 0 |
| 4. | டம்பர் பிளேசர் பின்கள் | : | 0 |
| 5. | காம்பேக்டர் பின்கள் | : | 160 |
| 6. | ஹூக் லோடர் பின்கள் | : | 2 |
| **<u>இரண்டாம் நிலை சேகரிப்பு :</u>** | | | |
| 1. | டிப்பர் லாரி | : | 1 |
| 2. | மினி டிப்பர் லாரி | : | 4 |
| 3. | காம்பேக்டர் லாரி | : | 6 |
| 4. | ஹூக் லோடர் லாரி | : | 1 |
| 5. | ஜே.சி.பி. | : | 1 |

51 வார்டுகளில் உள்ள வீடுகளில் சேகரமாகும் பிளாஸ்டிக் பொருட்களை தனியார் துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரித்து அதனை மறுசுழற்சி செய்யும் நபரிடம் விற்பனை செய்து, அதன் தொகையினை உரிய துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றது.

மாநகராட்சி உரக்கிடங்கில் உலர்கலம் அமைக்கும் பணி, குப்பை பிரிக்கும் பாதுகாப்பு கூடங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி, உரம் தயாரித்து சேமிக்கும் கூடங்கள் அமைக்கும் பணி போன்ற உள்கட்டமைப்பு பணிகளை ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளது. துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகளை பிரித்தெடுக்கப்பட்டு உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதலுடன் 51 வார்டுகளில் தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள நகர் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுமதி கோரி கருத்துரு அனுப்பப்பட்டு, தற்போது தனியார் மூலம் (51 வார்டுகளில்) பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 9.1 <u>டெங்கு காய்ச்சல் ஒழிப்பு குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம் :-</u>

160 எண்ணிக்கை தற்காலிக பணியாளர்களைக் கொண்டு கீழ்க்கண்ட டெங்கு ஒழிப்பு சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1) பைரித்ரம் மருந்தினை பயன்படுத்தி புகை ஒழிப்பு பணி மேற்கொள்ளுதல்
2) விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தல்.
3) டெங்கு பற்றிய விழிப்புணர்வு பேரணி நடத்துதல் மற்றும் விளம்பர பலகைகள் அமைத்தல்.
4) ஒருங்கிணைந்த துப்புரவு பணி மேற்கொள்ளுதல் மற்றும் கொசு உற்பத்தியாகும் கலன்களை கண்டறிந்து அழித்தல்.
5) டெங்கு விழிப்புணர்வு குறித்து “மருத்துவ முகாம்" நடத்துதல்.
6) டெங்கு குறித்து சிறப்பு கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளுதல்.
7) டெங்கு தடுப்பு பணியாளர்கள் மூலம் குழுவாக சென்று டெங்கு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு அடையாள வில்லைகளை ஒட்டுதல்.
8) தினசரி அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சல் காரணமாக பாதிப்படைந்தவர்கள் விவரங்களை சேகரிக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 10) <u>கழிவுநீர் :–</u>

காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் மூலம் தினந்தோறும் 11.00 லட்சம் லிட்டர் கழிவுநீரை நத்தப்பேட்டை பகுதியில் அமைந்துள்ள WSP முறையிலான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு மாநகராட்சிக்கு சொந்தமான புல்பண்ணை வழியாக வெளியேற்றப்பட்டு வருகிறது.

## 11) <u>பணிகள்</u> :–

### 11.1 <u>பாலங்கள், மதகுகள்:-</u>

இவ்வாண்டு எவ்வித பெரிய வேலைகள் செய்யப்படவில்லை.

### 11.2 <u>பரிசல் துறைமுகங்கள்:-</u>

–––இல்லை–––

### 11.3 <u>சொந்தக்கட்டிடங்கள்:-</u>

நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களுக்கு அவ்வப்போது தேவையான பரரமரிப்பு பணிகள் செய்யப்பட்டன.

### 11.4 <u>நீர்நிலை ஆதாரங்கள்:-</u>

காஞ்சிபுரம் நகரில் 44 நீர்நிலை ஆதாரங்கள் உள்ளன. அவை முறையே கோயில் குளங்கள், குட்டைகள், ஏரி மற்றும் கால்வாய்கள் ஆகும்.

### 11.5 <u>கோவில் குளங்கள்–29</u> :–

இவற்றில் தொல்பொருள் ஆய்வு துறையின் கட்டுபாட்டின்கீழ் 2 ம், தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 27 ம் உள்ளது. மேற்படி நீர்நிலை ஆதாரத்தை பேணிகாக்க வேண்டிய அவசியத்தின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆணைக்கு இணங்க, குளங்கள் சுகாதாரமான முறையில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**11.6 <u>குட்டைகள்–12</u> :–**

இவைகள் வருவாய் துறை புறம்போக்கு குட்டைகள் என இனம் காணப்பட்டுள்ளது. எனவே குட்டைகள் வருவாய்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இவை நீர்நிலை ஆதாரமாக இருப்பதால் அவற்றை பேணிகாக்க வேண்டிய அவசியத்தின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆணைக்கு இணங்க, சுகாதாரமான முறையில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**11.7 <u>ஏரி–2</u> :–**

நகரின் கிழக்கே அல்லாபாத் ஏரி மற்றும் ஓரிக்கை ஏரி ஆகியவை நகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

**11.8 <u>கால்வாய்கள்–3</u> :–**

இவைகள் தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இவற்றில் நகரின் மையத்தில் ஓடும் பிரதான மஞ்சள் நீர் கால்வாயை மேம்படுத்த ஜவுளி மைய மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ.366.00 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பொதுப்பணித்துறையால் மேற்படி திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டது. தேனம்பாக்கம் கால்வாய், ஓரிக்கை கால்வாய் ஆகியவை தூர் வாரி பராமமாக்கப்பட்டு வருகிறது.

**12. <u>நீரளிப்பு – பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்</u>**

இந்நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் 1897–ம் ஆண்டு முதல் வேகவதி ஆற்றிலிருந்து வழங்கப்பட்டு வந்தது.

நகரில் வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப தினந்தோறும் பெறப்பட்டு வந்த குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினால் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயலாக்கப்பட வேண்டியநிலை ஏற்பட்டது. காஞ்சிபுரம் நகரிலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ள ஓரிக்கை பகுதியில் பாலாற்றிலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு பாதுகாப்பட்ட குடிநீர்த்திட்டம் செயலாக்கப்பட்டு வந்தது. இந்த திட்டம் 1991–ம் ஆண்டின் எதிர்பார்ப்பு மக்கள் தொகையாக 119543க்கு தேவையை கணக்கிடப்பட்டு செயல்படுத்தப்பட்டதாகும்.

ஆனால் நகரின் மக்கள் தொகை ஏற்கனவே கணக்கிட்டதற்கு மாறாக 1991–ம் ஆண்டில் 145033ஆக உயர்ந்ததால் குடிநீர் தேவை அதிகரித்து பற்றாக்குறை ஏற்பட்டது. இதனை நிவர்த்திசெய்யும் வகையில் புதியதாக குடிநீர் அபிவிருத்தி திட்டம் ஒன்று பாலாற்றை மையமாகக்கொண்டு நகரின் மேற்கே 35 கி.மீ. தொலைவில் காவேரிப்பாக்கம், திருப்பாற்கடல் என்னும் இடத்திலிருந்து செயல்படுத்த அரசுக்கு பிரேரணைகள் சமாப்பிக்கப்பட்டது.

இந்நகராட்சிக்கு திருப்பாற்கடல் பகுதியிலிருந்து (காஞ்சிபுரம் – வேலூர் சாலையில் சுமார் 34 கி.மீ. தொலைவில் காவேரிபாக்கம் அருகில்) குடிநீர் அபிவிருந்தி திட்டம் மூலம் வேகவதி குடிநீர் இணைப்பு நிலையத்திற்கு கொண்டு வந்து விநியோகம் செய்யும் வகையில் சுமார் 18.63 கோடி மதிப்பீட்டில் திட்டம் அரசால் உலக வங்கி நிதி உதவியுடன் அனுமதிக்கப்பட்டது. 1992–ம் ஆண்டில் இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு, நல்ல நிலையில் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மேற்கண்ட குடிநீர் அபிவிருத்தி திட்டம் 02.07.1993 முதல் 14.07.1994 வரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் சோதனை ஓட்டம் மூலம் இயக்கப்பட்டு 15.7.94 முதல் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தல் கீழ்க்கண்ட ஐந்து இடங்களில் புதியதாக நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு, ஏழு மண்டலங்களாக பிரித்து அதன்மூலம் குடிநீர் நகருக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

| **(லிட்டர் – லட்சத்தில்)** | | **கொள்ளளவு (லிட்டர் – லட்சத்தில்)** |
|---|---|---|
| 1. உப்பேரிகுளம் | – | 10.00 |
| 2. ஜவஹர்லால் மார்க்கெட் | – | 20.00 |
| 3. மண்பம் தெரு | – | 20.00 |
| 4. யதோத்தகாரி தெரு | – | 20.00 |
| 5. பட்டாளத் தெரு | – | 8.00 |

மேற்கண்ட குடிநீர் அபிவிருத்தி திட்டம் 2001 மற்றும் 2021 –ம் ஆண்டுகளில் 152984 மற்றும் 228000 மக்கள் தொகைக்கு ஏற்ப திட்டமிடப்பட்டு கடந்த 1994 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த புதிய திட்டத்தின் மூலம், சினசரி 150 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் திருப்பாற்க்கடலிலிருந்து வேகவதி மூலமும், பாலாற்று ஓரிக்கை நிலைய குடிநீர் இறைப்பான் மூலமும் நீர் இறைக்கப்பட்டு நகரின் எல்லா பகுதிகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி திட்ட நீரேற்று நிலையங்கள் 1990–ல் நிறுவப்பட்டு 15 ஆண்டுகள் ஆகி திறன் குறைந்த மோட்டார் பம்புகளுக்கு பதிலாக புதிய மோட்டார் பம்புகள் மாற்றி ஆற்றல் சேமிப்பு செய்யும் பணியை மேற்கொண்டு அபிவிருத்தி செய்ததன் விளைவாக 2019–ம் வருடம் வரையிலான இடைப்பட்ட கால மக்கள் தொகை மற்றும் 2034–ம் வருடம் வரையிலான எதிர்வரும் கால மக்கள் தொகை பெருக்கத்தை கருத்திற்கொண்டு ஏற்கனவே சுமார் 15 வருடங்களுக்கு மேலாக இயக்கப்பட்டு செயல்திறன் குறைந்த நிலையில் உள்ளதை மாற்றி நாள் ஒன்றுக்கு 200 லட்சம் லிட்டர்கள் நீர் இறைக்கும் அளவுள்ள செயல்திறனுடன் மோட்டார் பம்புகள் மற்றும் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ஸ்டார்டர்கள் செயல்படுத்தப்பட்டு தற்போது 180 லட்சம் லிட்டர்கள் தினசரி குடிநீர் இறைப்பு செய்யப்பட்டு நகரில் எல்லா பகுதிகளுக்கும் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் விழாக்காலங்களிலும், பண்டிகை நாட்களிலும் அதிகப்படியான நேரங்களில் தேவைக்கு ஏற்றப்படி குடிநீர் வழங்கப்பட்டு வரப்படுகிறது. இதில் முக்கியமாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரானது பாதுகாக்கப்பட்ட கிருமிகள் அகற்ற சுகாதாரமான நிலையில் வழங்கும்பொருட்டு நவீன தொழிநுட்பம் கொண்ட சோடியம் ஹைபோ குளோரைட் திரவ குளோரின் இயந்திரங்கள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ள அளவுகோலின்படி குடிநீர் ஆதாரம் உள்ள இடத்தில் 2.00 PPM என்ற அளவில் இயந்திரம் மூலம் குடிநீர் குழாயிலேயே செலுத்தப்பட்டு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியில் 1.00 PPM என்ற அளவிலும் பராமரிக்கப்படுவதுடன் 24 மணி நேரத்தில் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் சோதனை செய்தாலும் குளாரின் கலக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகத்தில் உள்ளது என ஊர்ஜிதம் செய்யப்படுகிறது. மேலும் மாதம் ஒருமுறை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மாவட்ட சோதனைக் கூடத்திலும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை சென்னை கிங் இன்ஸ்டிட்யூட் மூலமும் சோதனை செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

**12.1 <u>குடிநீர் ஆதாரம்:</u>**

நகராட்சி பொதுமக்களின்தேவைக்காக குடிநீர் நகராட்சியிலிருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ள திருப்பாற்கடல், 5 கி.மீ. தொலைவில் உள்ள ஓரிக்கை மற்றும் வெங்கடாபுரம் மற்றும் பாலாற்று படுக்கை பகுதிகளிலிருந்து பெறப்படுகிறது.

**12.2 <u>குடிநீர் தேவை:</u>**

நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைந்துள்ள பகுதிகளுக்கு 135 லிட்டர் மற்றும் பாாாள சாக்கடை திட்டம் இல்லாத பகுதிகளுக்கு 96 லிட்டர் என்ற அடிப்படையில் நகரட்சியின் தினசரி குடிநீர் தேவை 28.70 MLD ஆகும்.

**12.3 <u>குடிநீர் திட்டம்:</u>**

இந்நகராட்சியில் தற்போது திருப்பாற்கடல், ஓரிக்கை மற்றும் வெங்கடாபுரம் திட்டத்தின் மூலம் 15.00 மில்லின் லிட்டர் குடிநீரும், உள்ளூர் குடிநீர் ஆதாரங்களின் மூலம் 5.75 மில்லியன் லிட்டர் குடிநீரும் ஆக மொத்தம் 20.75 மில்லியன் லிட்டர் குடிநீர் தினசரி பெறப்பட்டு சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 96 லிட்டர் வீதம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**12.4 <u>தற்போதய நிலை</u>**

தற்போது திருப்பாற்கடல் (9.00 MLD) ஓரிக்கை (3.50 MLD) மற்றும் வெங்கடாபுரம் (2.50 MLD) பகுதிகளில் குடிநீர் இருப்பு குறைந்துள்ளதால், சராசரியாக தினசரி 15.00 மில்லியன் லிட்டராக குடிநீர் மட்டும் பெறப்படுகிறது. எனவே இதனை சமாளிக்கும் பொருட்டு பாலாற்று படுக்கையில் அமைந்துள்ள 27 எண்ணிக்கை நீர் உறிஞ்சு கிணறுகள் மற்றும் 40 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள் மூலம் 5.75 மில்லியன் லிட்டர் மற்றும் ஆக மொத்தம் 20.75 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 96 லிட்டர் வீதம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் இடைவெயியில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

### 12.5 லாரி மூலம் குடிநீர் விநியோகம்

குடிநீர் பகிர்மான குழாய்கள் இல்லாத பகுதிகளிலும், மேடான பகுதிகளிலும் நகராட்சிக்கு சொந்தமாக உள்ள 4 எண்ணிக்கை டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

### 12.6 குடிநீர் அல்லாத பிற உபயோகங்கள்

மேலும் குடிநீர் அல்லாத பிற உபயோகங்களுக்கு 150 கைப்பம்புகள் மற்றும் 543 சிறுமின் விசை இறைப்பான்கள் மூலம் நீர் பெறப்பட்டு பொதுமக்களுக்கு தினசரி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் முக்கியமாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரானது பாதுகாக்கப்பட்ட கிருமிகள் அற்ற சுகாதாரமான நிலையில் வழங்கும்பொருட்டு நவீன தொழில்நுட்பம் கொண்ட சோடியம் ஹைபோகுளோரைட் திரவ குளோரின் இயந்திரங்கள் அமைக்கப்பட்டு, அதன் மூலம் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ள அளவுகோலின்படி குடிநீர் ஆதாரம் உள்ள இடத்தில் 2.00 PPM என்ற அளவில் இயந்திரம் மூலம் குடிநீர் குழாயிலேயே செலுத்தப்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் 1.00 PPM என்ற அளவிலும் பகிர்மானக் குழாய் மூலம் கடைசி நிலையில் 0.2 PPM முதல் 0.5 PPM என்ற அளவிலும் பராமரிக்கப்படுவதுடன், 24 மணி நேரத்தில் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் சோதனை செய்தாலும் குளோரின் கலக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகத்தில் உள்ளது என ஊர்ஜிதம் செய்யப்படுகிறது. மேலும் மாதம் ஒருமுறை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மாவட்ட சோதனைக் கூடத்திலும், ஆறு மாதத்திற்கு ஒருமுறை சென்னை கிங் இன்ஸ்டிட்யூட் மூலம் சோதனை செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

## 13. பொது சுகாதாரம் மற்றும் பணியமைப்பு விவரம் :–

### 13.1 பொது சுகாதார பிரிவு :–

இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 01.04.2021 முதல் 31.03.2022 முடிய டாக்டர். பி. முத்து, நகர் நல அலுவலராக அறிக்கையாண்டில் பணிபுரிந்துள்ளார்.

பொது சுகாதாரப் பிரிவு பணியாளர்கள் விவரம்

| | | |
|---|---|---|
| 1. துப்புரவு ஆய்வாளர்கள் | – | 6 |
| 2. துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | – | 13 |
| 3. ஓட்டுநர்கள் | – | 5 |
| 4. துப்புரவு பணியாளர்கள் | – | 132 |
| 5. களப்பணியாளர்கள் | – | 1 |

### 13.2 மருத்துவ பிரிவு :–

| | | |
|---|---|---|
| 6. மருந்தாளுநர் | – | 1 |
| 7. துப்புரவு பணியாளர் | – | 1 |
| 8. பெண் செவிலியர் உதவியாளர் | – | 1 |

### 13.3 மகப்பேறு பிரிவு :–

| | | |
|---|---|---|
| 9. மகப்பேறு உதவியாளர் | – | 2 |
| 10. மகப்பேறு அ. உதவியாளர் | – | 1 |

மேலே குறிப்பிட்ட சிப்பந்திகளுக்காக, இவ்வாண்டு ஏற்பட்ட செலவு ரூ.613.83 இலட்சம் ஆகும். சென்றாண்டு ஏற்பட்ட மொத்த செலவு ரூ.610.77 இலட்சம் ஆகும். மேலும், அறிக்கை ஆண்டில் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருவிழா, அருள்மிகு வரதராஜ பெருமாள் ஸ்வாமி திருக்கோயில் திருவிழா மற்றும் அருள்மிகு காஞ்சி காமாட்சி அம்மன் திருக்கோயில் திருவிழாக்களின் போது திருப்திகரமாக தீவிர துப்புரவு பணி (Mass Programme) செய்து நகரை சுத்தமாக வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

**13.4 <u>கொரோனா தடுப்பூசி :–</u>**

| UPHC | I DOSE | II DOSE | Precautionary dose |
|---|---|---|---|
| சின்ன காஞ்சிபுரம் UPHC | 41068 | 39991 | 4077 |
| நத்தப்பேட்டை UPHC | 21379 | 16939 | 2484 |
| பஞ்சுப்பேட்டை UPHC | 38086 | 34852 | 3211 |
| பிள்ளையார் பாளையம் UPHC | 37202 | 34456 | 3317 |
| செவிலிமேடு UPHC | 28340 | 28001 | 3596 |

13.5 <u>பிறப்பு வீதம், மகப்பேறு உதவியும்:</u>–

இந்நகரில் உள்ள அரசு மற்றும் **தனியார் மருத்துவ மனைகளில் நிகழ்ந்த** பிறப்புகள் 2260 சென்ற ஆண்டு 2136 இவ்வாண்டு பிறப்பு விகிதம் மக்கள் தொகையில் ஆயிரத்திற்கு 0.94 சென்ற ஆண்டு 0.92. இறந்து பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 0.

**13.6 <u>மாநகராட்சி தாய் சேய் நல விடுதி :–</u>**

இம்**மா**நகராட்சியில் சின்ன காஞ்சிபுரத்தில் ஒரு விடுதியும், பெரிய காஞ்சிபுரத்தில் ஒரு விடுதியும், பிள்ளையார் பாளையத்தில் ஒரு விடுதியும், நாராயணபாளையத்தில் ஒரு விடுதியும், **செவிலிமேடு ஒரு விடுதியும்** ஆக மொத்தம் ஐந்து தாய் சேய் நல விடுதிகள் இருக்கின்றன. தாய்சேய் நல விடுதிகள் ஐந்தும் நகராட்சியின் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அதில் மகப்பேறு உதவியாளர் 2 பேரும், ஆயாக்கள் 0 பேரும் பணிபுரிகின்றனர்.

13.7 **<u>குழந்தைகள் இறப்பு:-</u>**

2 –மகப்பேறு உதவியாளர்கள் மகப்பேறு எய்துபவர்களை பிரசவத்திற்கு முன் 2525 தடவையும், மகப்பேறு எய்திய பின் 2650 தடவையும் பார்வையிட்டு கவனித்து வந்தனர்.

இவ்வாண்டு மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் சுகாதார **செவிலியர்கள் அறிக்கையாண்டில்** பார்த்த மகப்பேறுகளின் எண்ணிக்கை 61 சென்ற ஆண்டு 55 **எண்ணிக்கை ஆகும்**.

இந்த ஆண்டில் தாய்சேய் நலபிரிவிற்காக செலவு ரூ.**164.25 இலட்சம்**. சென்ற ஆண்டு செலவு ரூ.**168.57 இலட்சம் ஆகும்.**

13.8 **<u>குடும்ப கட்டுப்பாடு:–</u>**

இந்நகராட்சியில குடும்பநல திட்டத்தின்கீழ் 2021–2022 ஆம் ஆணடு 526 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பபட்டது.

13.9 <u>நகர ஆரம்ப சுகாதார மையங்கள்:–</u>

அரசு ஆணை எண்.190 சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை நாள்.19.9.2002–ன்படி காஞ்சிபுரம் நகராட்சியில் மூன்று நகர ஆரம்ப சுகாதார மையங்கள் இயங்கி வருகின்றன.

## 13.10 நகர்நல மையத்தில் பணியாற்றும் பணியாளர்கள் விவரம்

| வ.எண் | பதவியின் பெயர் | பணியாளர் எண்ணிக்கை | பணியில் உள்ளவர்கள் |
|---|---|---|---|
| 1. | மருத்துவ அலுவலர்கள் | 3 | 1 |
| 2 | பொதுசுகாதாரசெவிலியர்கள் | -- | -- |
| 3 | பொதுசுகாதார பார்வையாளர்கள் | 3 | -- |
| 4 | தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் | -- | -- |
| 5 | பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் | 16 | 16 |
| 6 | பெண் அலுவலக உதவியாளர்கள் | 3 | 2 |

மேற்படி மையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்காக ஊதியம் அரசு **ஆணை எண்.136** குடும்ப **நலத்துறை நாள் 31–03–2001 ன்படி 66.67%** மத்திய அரசு நிதியிலிருந்து வழங்கப் படுகின்றன. **33.33 %சதவீத செலவினம் நகராட்சி மூலம் செலவிடப்படுகிறது.**

இத்திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களின் முக்கிய பணிகள் குடும்ப நல திட்டத்தை ஊக்குவிபபதாகும். இதன்படி நமது நகர எல்லைக்குட்பட்ட மக்களை கணக்கெடுப்பு செய்துஇதில் கருத்தடை செய்து கொள்வதற்கு தகுதி வாய்ந்த தம்பதியர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு குடும்ப நலம் பற்றிய கருத்துருக்களை எடுத்துக்கூறி நிரந்தர கருத்தடை முறை மற்றும் தற்காலிக கருத்தடை சாதனங்களை பயன்படுத்துமாறு ஊக்குவித்தல் மற்றும் கருவுற்ற பெண்களுக்கு பேறுகால முன், பின் கவனிப்பு மற்றும் அவர்களது குழந்தைகளுக்கு தடுப்பு ஊசி போன்ற பணிகளை செய்வது ஆகும்.

இதன்படி இந்நகராட்சியில் 2021–2022 ஆண்டிற்கு 687 தாய்மார்களுக்கு குடும்ப நல நிரந்தர முறையாக சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 514 தாய்மார்களுக்கு தற்காலிக முறையாக ஐ.யு.டி. சாதனமும் 189 தாய்மார்களுக்கு கருத்தடை மாத்திரைகளும், 402 ஆண்களுக்கு (நிரோத்) வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் 1845 கருவுற்ற தாய்மார்களை பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கு இரண ஜன்னி தடுப்பூசி 1880 தாய்மார்களுக்கு போடப்பட்டுள்ளது. இவர்களின் 1845 தாய்மார்களுக்கு பிரசவம் பார்க்கப்பட்டுள்ளது. குழந்தைகளுககாக முத்தடுப்பூசி 1815 குழந்தைகளுக்கும், போலியோ சொட்டு மருந்து (கூடுதல் போலியோ உட்பட) 1829 குழந்தைகளுக்கும், தட்டம்மை ஊசி 1829 குழந்தைகளுக்கும், காசநோய் தடுப்பூசி 1815 குழந்தைகளுக்கும், போடப்பட்டது.

## 13.11 இறப்பு விகிதம் – கொள்ளை நோய்களும், மகப்பேறு நோய்களும் :–

இந்நகரில் உள்ள இரண்டு மருத்துவ நிலையங்களில் ஏற்பட்ட வெளியூர் மக்களின் இறப்புகள் உட்பட இவ்வாண்டு பதிவான இறப்புகளின் எண்ணிக்கை 1554 சென்ற ஆண்டு 7.51 இவ்வவாண்டு இறப்பு விகிதம் 2.68.

| நோய் விவரம் | இறப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. காய்ச்சல் | – |
| 2.சீதபேதி | –– |
| 3.மூச்சுப்பை நோய்கள் | 1448 |
| 4.இதர நோய்கள் | 92 |
| 5.வாந்திபேதி | –– |
| 6.வயிற்று போக்கு | –– |
| 7.தற்கொலை | 11 |
| 8.விபத்துகள் | 3 |
| 9.காசநோய் | 1 |
| மொத்தம் | 1554 |

## 13.12 வாந்தி பேதி :–

இவ்வாண்டு வயிற்றுப்போக்கு நோயினால் 290 பேர்கள் பாதிக்கப்பட்டனர். இதில் யாரும் இறக்கவில்லை. இந்த நோய் சிகிச்சை செய்ய அரசாங்க மருத்துவ மனையில் தொற்றுநோய் கொட்டகைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 13.13 நோயாளிகள் :–

மாநகராட்சியால் நடத்தப்படும் மருந்தகங்கள் நல்ல முறையில் நடைபெற்று வந்துள்ளன. இவ்வாண்டு மருத்துவ உதவி பெற்றவர்களின் எண்ணிக்கை 2240 சென்ற ஆண்டு 1890 எண்ணிக்கை ஆகும்.

## 13.14 பொது நலத் துறை ஆட்களின் வாழ்க்கை நிலை :–

இந்நகராட்சியில் வாடகையின்றி 33–வீடுகள் பொதுநலத் துறை ஆட்களுக்கு இருப்புப்பாதை நிலையததின் அருகில் கட்டித்தரப்பட்டுள்ளது. தன்னிறைவு திட்டத்தில் துப்புரவு தொழிலாளர்களுக்கு 24 குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டது. வழக்கம்போல் துப்புரவு தொழிலாளர்களுக்கு சீருடைக்ள வழங்கப்பட்டது.. எல்லா அரசுவிடுமுறை நாட்களிலும் மற்றும் ஞாயிறு கிழமைகளில் இவ்வறிக்கை ஆண்டில் துப்புரவு பணியாளர்களுக்கு பிற்பகல் விடுப்பு வழங்கப்பட்டது.

## 13.15 தெரு நாய்களுக்கு கருத்தடை பணி :–

2021–2022 ம் ஆண்டு மாநகராட்சியின் சார்பாக 245 நாய்களைப் பிடித்து கருத்தடை ஊசி போட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 13.16 கொசு ஒழிப்பு பணி :–

அறிக்கையாண்டில் TEMEPHOSE 50 % E.C 100 லிட்டர் வாங்கி பயன்படுத்தப்பட்டது.

மாநகராட்சியின் மூலம் தூய்மை பணியாளர்கள் சைக்கிள்களில் மேலத்தியன் மருந்து பய்னபடுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சியின் மூலமாக 600 லிட்டர் Pyrethrum Extract 2 % வாங்கி வளர்ந்த கொசுக்களை புகைதெளிப்பான் மூலமாக அழிக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## 13.17 துப்புரவு :–

தினசரி தெருக்களில் குப்பையும், மணலும் மற்ற கழிவுப்பொருட்களும் இம்மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் கீழ்க்கண்ட வாகனங்கள் மூலம் எருத்திடலுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

| வ.எண் | வாகனங்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | டம்பர் பிளேசர் | 0 |
| 2. | குப்பை லாரி | 1 |
| 3. | மினி லாரி | 4 |
| 4. | டிராக்டர் மற்றும் டிரெய்லர் | 0 |
| 5. | குப்பை வண்டிகள் (BOV) | 78 |
| 6. | ஆட்டோ (LCV) | 16 |
| 7. | Front End Loader (JCB) | 1 |
| 8. | காம்பேக்டர் லாரி | 6 |
| 9. | Hook Loader | 1 |

**13.18 <u>உரக்கிடங்கு :–</u>**

உரக்கிடங்கின் விஸ்தீரணம் 39.41 ஏக்கர் உள்ளது. நகரில் தினசரி உருவாகும் திடக்கழிவுகள் வாகனங்கள் மூலம் உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லப்படுகிறது.

பாதாள சாக்கடை திட்டம் அமுலில் உள்ளதால் கழிவுநீர் உரக்கிடங்கு உபயோகப்படுவதில்லை.

2018ம் வருடத்திய திடக்கழிவு மேலாண்மை விதிகளை பின்பற்றும் வகையில் திடக்கழிவு மேலாண்மை செய்திட மாநகராட்சிக்கு சொந்தான நத்தப்பேட்டை கழிவுநீர் புல்பண்ணையில் 39.41 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.76.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு வளர்ச்சி திட்டத்தின் கீழ் திட்டத்தை நிறவேற்றிட தமிழ்நாடு நகர்ப்புற நிதியம் மற்றும் கூட்டமைப்பு மேம்பாடு கழகம், சென்னை அவர்கள் அனுமதி அளித்துள்ளது.

தினசரி சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பைகளை தரம் பிரித்து MCC Centre 20 MT உரமாக்கப்படுகிறது. மக்காத குப்பையினை மாநகராட்சி மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

**<u>பொது மல அறைகள்</u>**

**13.19 <u>கட்டண கழிப்பிடம் :–</u>**

இம்மாநகராட்சியில் 15 பொது மல அறைகளும், 1 சிறுநீர் கழிப்பிடம் இருந்தது, கீழ்கண்ட இரண்டு நவீன கழிப்பிடஙகள் அலுவலகம் மூலம் வசூல் செய்யப்பட்டது.

இராஜாஜி சந்தை அருகில் – 1

விளக்கடி கோயில் அருகில் – 1

பொது கழிப்பிடங்கள் பாதாள சாக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**14) <u>சத்துணவு திட்டம்</u> :–**

15.09.1982–ம் தேதியிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டு மாணவர்களுக்கு சத்தணவு வழங்கப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் 26 சத்துணவு மையங்கள் உள்ளன அதில் 1 முதல 12–ம் வகுப்பு வரையிலுள்ள மாணவர்கள் பயனடைகின்றனர். ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு அமைப்பாளர், ஒரு சமையலர், ஒரு உதவியாளர் நியமிக்கப்பட்டு சிறந்த முறையில் சத்துணவு பணிகள் நடைபெறுகின்றது. இத்திட்டத்தின்கீழ் 2021–2022 தினசரி சராசரியாக 3013 பிள்ளைகள் பயன்பெறுகின்றனர். 28.10.2014 முதல் சத்தணவு மையங்களில் பயன்பெறும் பிள்ளைகளுக்கு தினமும் மசாலா முட்டையுடன் கலவை சாதமும் தயார் செய்து வழங்கப்பட்டு வருகிறது.

## 15) வருவாய் பிரிவு :-

### 15.1 சந்தை :-

இராஜாஜி சந்தை ஜவஹர்லால் சந்தை ஆகிய இரண்டு தினசரி சந்தைகளையும், நகராட்சி மீன் சந்தை ஆகியவைகளிலும் கட்டணம் வசூலிக்கும் உரிமையை குத்தகைக்கு பொது ஏலத்தில் விடப்பட்டத்தின் மூலம் வருவாய் ரூ.64,51,000/-வரப்பெற்றது. சென்ற ஆண்டு ரூ.41,17,838/- ஆகும்.

இராஜாஜி தினசரி சந்தை மிகவும் 100 ஆண்டுகள் கடந்த பழமை வாய்ந்ததும் பல்வேறு மக்கள் தினமும் வந்து செல்லக்கூடிய சந்தையாகும். மேற்படி சந்தை பழுதடைந்துள்ளதால் அவற்றை புதுப்பித்து கட்டவும் இறைச்சி, மீன் அங்காடிகளுக்கு மலர் மற்றும் கனிகளுக்கு தனித்தனி பிரிவுகள் கொண்டதும் அனைத்து விதமான அங்காடிகளும் ஒரேஇடத்தில் அமையும் விதத்தில் அங்காடிகள், அவைகளுக்கு முறையான பாதைகள், பொருட்களை பதப்படுத்த குளிரூட்டு வசதி ஆகிய வசதிகளுடன் கட்டமைப்பு ஏற்படுத்த மதிப்பீடு ரூ.218.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு நகர்புற நிதியம் மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு கழகம், சென்னை அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். மேற்படி பணியானது ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர மேம்பாட்டு திட்டத்தின்கீழ் செயல்படுத்த நடடிவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது மீன் இறைச்சி அங்காடி மற்றும் நவீன ஆடு அறுக்கும் தொட்டி ஆகியவை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

### 15.2 ஆடு அறுக்கும் தொட்டி :-

இந்நகராட்சியில் நவீன ஆடுஅறுக்கும் நீர்கூடம் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேற்படி ஆடு தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமையை 01.04.2021 முதல் 31.03.2022 வரை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் வருவாய் ரூ.1,64,850/- வரப்பெற்றது.

### 15.3 பேருந்து நிலையம் :-

இந்நகராட்சி பேருந்து நிலையத்தை முதல்தர பேருந்து நிலையமாக மாற்றுவதற்கு திட்டம் தீட்டப்பட்டு ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பேருந்து நிலைய அபிவிருத்தி பணிகள் மொத்தம் ரூ.92.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் செய்ய நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் 11.06.1992-ம் தேதிய ந.க.எண்.23125/87/U.P.2 கடிதத்தில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

**பணிகளின் விவரம்**

| | | |
|---|---|---|
| 1. பேருந்து நிறுத்தும் தளம் | .. | 52 |
| 2. பயணிகள் தங்கும்.இடம் | .. | 2 |
| 3. பேருந்து உட்புறம் கடைகள் | .. | 77 |
| 4. கழிவறைகள் | .. | 2 |
| 5. சிறுநீர் கழிக்கும் இடம் | .. | 2 |
| 6. பேருந்து உட்புற சாலைகள் | .. | 3 |

மேற்படி திட்டம் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கட்டப்பட்ட கடைகள் மூலம் வருவாய் பின்வருமாறு.

### 15.4 பேருந்துநிலையம் 2021–2022 :–

| | | | |
|---|---|---|---|
| 1 | பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை(துறை வசூல) | ---- | 912500.00 |
| 2 | பேருந்து நிலைய தென்புறம் மிதிவண்டிஉரிமை | ---- | 785531.00 |
| 3 | பேருந்துநிலைய மிதிவண்டிநிலைய உரிமை | ---- | 1218000.00 |
| 4 | பேருந்துநிலைய ஒலிபெருக்கி உரிமை | ---- | 0 |
| 5 | பேருந்துநிலைய நுழைவுவாயில் கடை | ---- | 217775.00 |
| 6 | இரும்பு பங்க் | ---- | – |
| 7 | பேருந்து நிலைய ஓட்டல் உரிமை | ---- | – |
| 8 | பேருந்துநிலைய குடிநீர்தேக்கத்தொட்டி அருகிலுள்ளகடை | ---- | – |
| 9 | பேருந்துநிலைய IDSMT புதிய கடை மூலம் வருமானம் | ---- | 69039.00 |
| 10 | இராஜாஜி சந்தை தினசரி மார்க்கெட் | ---- | 61.30.000.00 |
| 11 | ஜவகர்லால் நேரு சந்தை | ---- | 321000.00 |
| 12 | கோவில்களில் வண்டிகள்பார்க்கிங் | ---- | 821192.00 |
| 13 | ராஜாஜி மார்க்கெட் மிதிவண்டி உரிமை | ---- | 223742.00 |
| 14 | காந்தி ரோடு பகுத்தறிவு வண்டிபார்க்கிங் | ---- | – |
| 15 | விளக்கடி கோயில் கழிப்பிடம் | ---- | 354000.00 |

### 15.5 பூங்காக்கள்

இம்மாநகராட்சி பகுதியில் உள்ள 92 பூங்காக்கள் தொடர்ந்து பராமரிக்கப்படுகின்றன.

கச்சபேஸ்வரர் நகர் அண்ணா நூற்றாண்டு பூங்கா, வைகுண்ட பெருமாள் கோயில் தெரு மற்றும் கே.எம்.ஜி. நகர் பூங்காக்கள் பொது மக்கள் பயன்பெறும் வகையில் நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் AMRUT திட்டத்தின் 16 பூங்காக்கள் அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

### 15.6 கட்டிட உரிமம்

அறிக்கை ஆண்டில் 589 கட்டிட உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது.

### 15.7 அளவு கடப்புகள்

புதியதாக ஏற்படும் கடப்புகளை அவ்வப்போது அகற்றப்பட்டன. ஆண்டு முடிய ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

### 15.8 பொது வருமானம்

| வ. எண் | வரி விகிதங்கள் (சொத்து வரி) | அரையாண்டு வீதம் ஆண்டு வாடகை மதிப்பின் பேரில் |
|---|---|---|
| 1 | பொது | 8.33% |
| 2 | குடிநீர் விநியோகம் மற்றும் புதை வடிகால் | 6.00% |
| 3 | கல்வி | 2.50 % |
| 4 | நூலக வரி | 1.43% |
| | **மொத்தம்** | 18.26 % |

கட்டிடத்தோடு சேராத காலிமனை வரி அரையாண்டிற்கு காலிமனைக்கான நில மதிப்பின் பேரில் 60 பைசா, 50 பைசா, 40 பைசா வீதம் கணக்கிடப்படுகிறது.

**15.9 <u>சொத்துவரி</u>**

காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 2021–2022 மொத்த சொத்துவரி விதிப்புகள் 50744 ஆகும். அதன் கேட்பு ரூ. 944.71 இலட்சமாகும்.

**15.10 <u>குடிநீர் கட்டணம்</u>**

| | | |
|---|---|---|
| மொத்த வரி விதிப்புகள் | – | 32520 |
| மொத்த கேட்புத் தொகை | – | ரூ.196.81 இலட்சம் |

**15.11 <u>புதைவடிகால் கட்டணம்</u>**

| | | |
|---|---|---|
| மொத்த வரி விதிப்புகள் | – | 20977 |
| மொத்த கேட்புத் தொகை | – | ரூ.195.18 இலட்சம் |

**15.12 <u>தொழில் வரி</u>**

தொழில் வரி நுண்ணறிவுத்திறன் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், ஆகியவற்றின் மீதான வரி விகிதங்கள் தமிழ்நாடு தொழில் வரி சட்டம் 9/9–4–ன் படியும் மற்றும் 12/95–ன் படியும் வெளியிடப்பட்ட அட்டவணைப்படி வசூலிக்கப்படுகின்றன. 12.01.1999–ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அசராணை எண்.11–ன்படி 01.10.2018 முதல் தொழில்வரி விகிதங்களை 30 சதவீதம் உயர் செய்து திருத்தி அமைக்கப்பட்டு வசூலிக்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| மொத்த வரி விதிப்புகள் | – | 3910 |
| மொத்த கேட்புத் தொகை | – | ரூ.179.22 இலட்சம். |

**15.13 <u>வழக்குகள்</u> :–**

2021–2022–ம் ஆண்டில் சொத்து வரி சம்பந்தமாக 116 சொத்து வரி விதிப்புகளின் மீது வழக்குகள் உள்ளது. வழக்குகள் மூலம் நிலுவைத் தொகை ரூ.213.11 இலட்சம் வசூலிக்கப்பட வேண்டியுள்ளது.

**16) <u>தணிக்கைத் தடைகள் :–</u>**

2021–2022–ம் ஆண்டின் ஆரம்பத்தில் 983 தணிக்கை தடைகள் இருந்தது. அறிக்கையாண்டில் தணிக்கை தடைகள் ஏதும் நிவர்த்தி செய்யப்படவில்லை.

**17) <u>நிதி நிலைமை :–</u>**

இந்நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, கல்வி நிதி ஆகியவற்றில் இவ்வாண்டு வருமானம் ரூ.**5998.81** இலட்சம் மற்றும் செலவினம் ரூ.**5416.16** இலட்சமாகும்.

**18) <u>கடன்கள்</u> :–**

கடன்களுக்கு அசல் மற்றும் வட்டியுடன் திருப்பிச்செலுத்தும் வகையில் ரூ.63.16 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

## 19) <u>தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் (National Urban Livelihoods Mission)</u> :–

காஞ்சிபுரம் மாநகராட்சியில் சொர்ண ஜெயந்தி திட்டம் (SJSRY) 2014–2015 முடிவடைந்து 12.11.2015 முதல் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) என்ற திட்டம் துவக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

### 19.1) <u>Scheme for Shelter for Urban Homeless (SUH)</u> :–

காஞ்சிபுரம் மாநகராட்சியில் பஞ்சுப்பேட்டை பெரிய தெருவில் நகர்புற வீடற்றவர்களுக்கு தங்கும் விடுதி கட்டி 16.06.2017 முதல் நாளந்தா கல்வி அறக்கட்டளை, திண்டுக்கல் என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மதிப்பீடு ரூ.50.00 இலட்சம் ஆகும். இக்கட்டிடத்தில் 75 பயனாளிகள் தங்கி பயனடைந்து வருகின்றனர். நிரந்தரமாக 45 பயனாளிகள் தங்கி பயன் அடைகிறார்கள். நகராட்சிக்கு அரசின் மூலம் (O & M) நிதி மான்யம் பெற்று நாளந்தா கல்வி அறக்கட்டளை மூலம் பராமரிக்கப்பட்டுவருகிறது. அறிக்கையாண்டில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் (O & M) நிதி ரூ.7.50 இலட்சம் நிதி பெறப்பட்டுள்ளது.

### 19.2) <u>Special Shelter</u> :–

காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் நோயாளுகளுடன் உடன் வருபவர்களுக்கு தங்கும் விடுதி கட்டிடம் 2017–18 ஆம் ஆண்டு Special Shelter திட்டத்தில் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. 2019 செப்டம்பர் முதல் இக்கட்டிடம் New Spring Charitable Trust, Kancheepuram என்ற தொண்டு நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் நோயாளிகளுடன் உடன் வருபவர்கள் தங்குமி விடுதி கட்டிடத்தில் (சிறப்பு கட்டடம்) தினசரி சராசரியாக 120 பயனாளிகள் பயனடைந்து வருகிறார்கள்.

### 19.3) <u>Shelter for Urban Homeless</u>

காஞ்சிபுரம் நகராட்சியில் 2018–19 ஆம் ஆண்டு தங்கும் விடுதி கட்டிடம் இராஜாஜி மார்க்கெட் பகுதியில் ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட பணி உத்திரவு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

### 19.4) <u>தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம்</u>

### II. <u>SCHEME FOR URBEN STREET VENDOR (SUSV)</u> :–

காஞ்சிபுரம் மாநகராட்சியில் தேசிய நகர் புற வாழ்வாதார திட்டத்தில் (NULM) Scheme for Urban Street Vendor என்ற திட்டநிதி கணக்கு துவக்கப்பட்டு நடைமுறையில் இருந்துவருகிறது.

நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள சாலையோரம் வியாபாரிகள் விபரம் கணக்கெடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் மொத்த பயனாளிகள் 711 நபர்களுக்கு நகராட்சியின் மூலம் வியாபார அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு உள்ளது.

## 19.5) <u>சாலையோர வியாபாரிகளுக்கு கடனுதவி வழங்கும் திட்டம் (PM–SVANidhi)</u>

காஞ்சிபுரம் மாநகராட்சியில் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் – PM–SVANidhi திட்டத்தில் கொரோனா ஊரடங்கு காலத்தில் சாலையோர வியாபாரிகள் பாதிக்கப்பட்டதால் அவர்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைய நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட 711 பயனாளிகளில் 704 பயனாளிகளுக்கு தலா ரூ.1000/– வீதம் இரண்டு தவணைகளாக நிவாரண தொகை வழங்கப்பட்டுள்ளது.

சாலையோர வியாபாரிகளுக்கு PM–SVANidhi திட்டத்தில் தலா ரூ.10,000/– வங்கிகளின் மூலம் கடனுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையரின் உத்திரவின்படி இந்நகராட்சியில் மேலும் கூடுதலாக 5000 சாலையோர வியாபாரிகள் தேர்வு செய்து வங்கிகளின் மூலம் கடனுதவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டது.

தற்பொழுது நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு மேலும் கூடுதலாக 1500 இலக்கு நிர்ணயித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சியின் மொத்த கூடுதல் இலக்கான 7211 சாலையோர வியாபாரிகளில் 6267 பயனாளிகளின் விவரங்கள் PM–SVANidhi திட்ட வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதில் வங்கிகளின் மூலம் 2093 பயனாளிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 1892 பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் தலா ரூ.10,000/– கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி பயனாளிகளில் 642 வியாபாரிகளுக்கு 2 ஆம் தவணையாக தலா ரூ.20,000/– வீதம் வங்கிகள் மூலம் கடனுதவி வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டு, அதில் 426 வியாபாரிகளுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மூன்றாம் தவணையாக கடனுதவி திட்டத்தின் கீழ் ரூ.50,000/– வீதம் 8 வியாபாரிகளுக்கு வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 20) <u>மின் ஆளுமை</u> :–

நகராட்சி அலுவலகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் கணினிகள் அமைக்கப்பட்டுள்ளன. உலக வங்கியின் உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் II ன்கீழ் நகராட்சியில் கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நகராட்சியில் புதிய மென்பொருள் (UTIS – Urban Tree Information System) மூலம் நகராட்சியின் சேவைகள் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள், சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள், புதிய கணக்குமுறை, கட்டிட அனுமதி, வரவு செலவு கணக்குகள், மதிப்பீடு அறிக்கை, தணிக்கை தடை ஆகியவைகள் கணினியில் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. மேலும் இணையதளம் மூலம் பொதுமக்கள் தாங்களுக்கு தேவையான பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் கணினியில் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம் மற்றும் பொதுமக்கள் தங்களது சொத்து வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணங்கள், தொழில் வரி, வரியில்லா இனங்கள் (Non Tax), கட்டிட அனுமதி ஆகியவைகள் அனைத்தும் இணையதளம் மூலம் செலுத்தும் வசதிகள் நடைமுறையில் உள்ளது. இவ்வலுவலக அனைத்து பிரிவுகளுக்கும் இணையதள வசதியுடன் கணினிகள் வழங்கப்பட்டு அலுவலக நிர்வாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் பொதுமக்களின் நலன் கருதி கீழ் குறிப்பிடப்பட்ட இடங்களில் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் கணினி மூலம் வரி வசூல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1) நகராட்சி அலுவலகத்திலும் (2) சின்ன காஞ்சிபுரம் – தாய்சேய் நல விடுதி (3) பெரிய காஞ்சிபுரம் – கிருஷ்ணன் தெருவிலும் வசூல் மையம் மற்றும் (4) எல்லப்பா நகர், செவிலிமேடு பகுதி வரி வசூல் கணினி சேவை மையம் துவங்கப்பட்டு சொத்துவரி, குடிநீர் கட்டணம், புதை வடிகால் கட்டணம் மற்றும் தொழில்வரி, வரியில்லா இனங்கள் மற்றும் புதை வடிகால் வைப்பு தொகை ஆகிய வரியினங்கள் மற்றும் அபாயகரமானதும் அருவறுக்கத்தக்கதுமான (D&O) தொழில்களுக்கான கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கட்டிட உரிமம் அனுமதி அளித்தல், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குதல், அசையா சொத்துக்கள் குறித்த விவரம், தணிக்கை தடைகள் மற்றும் நகராட்சி கணக்குகள் புதிய மென்பொருள் (UTIS) மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>பொது</u> :–**

அறிக்கையாண்டில் காஞ்சிபுரம் மாநகர பகுதிவாழ் மக்கள் மற்றும் வரி செலுத்துபவர்கள் அனைவருக்கும் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும், மாநகராட்சியின் நிதிநிலைக்கு ஏற்பவும், இதர திட்டங்கள் வாயிலாகவும், தரமான சாலை வசதி, தெரு விளக்குகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, வடிகால் வசதி, மழைநீர் சேமிப்பு வசதி செய்யப்படுவதுடன் ஆண்டுதோறும் சிறப்பான முறையில் மேற்படி வசதிகளை செய்து மக்கள் பயன் அடைய வேண்டும் என்ற குறிக்கோள் கடைபிடிக்கப்பட்டு மாநகராட்சி நிர்வாகம் செயல்பட்டு வருகிறது. நிர்வாகத்தில் நல் ஒத்துழைப்பு நல்கிய நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர்களுக்கு நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் இவ்வலுவலக பிரிவு அலுவலர்களாகிய நகராட்சி பொறியாளர், நகர் நல அலுவலர், நகரமைப்பு அலுவலர், மேலாளர், வருவாய் அலுவலர், மற்றும் அனைத்து அகப்பணியாளர் மற்றும் புறப் பணியாளர்கள் அனைவருக்கும் நிர்வாகத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| | |
|---|---|
| **மாநகராட்சி அலுவலகம்,** | **ஆணையாளர்** |
| **காஞ்சிபுரம்.** | **காஞ்சிபுரம் மாநகராட்சி** |

மேலும் பொதுமக்களின் நலன் கருதி கீழ் குறிப்பிடப்பட்ட இடங்களில் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் கணினி மூலம் வரி வசூல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1) நகராட்சி அலுவலகத்திலும் (2) சின்ன காஞ்சிபுரம் – தாய்சேய் நல விடுதி (3) பெரிய காஞ்சிபுரம் – கிருஷ்ணன் தெருவிலும் வசூல் மையம் மற்றும் (4) எல்லப்பா நகர், செவிலிமேடு பகுதி வரி வசூல் கணினி சேவை மையம் துவங்கப்பட்டு சொத்துவரி, குடிநீர் கட்டணம், புதை வடிகால் கட்டணம் மற்றும் தொழில்வரி, வரியில்லா இனங்கள் மற்றும் புதை வடிகால் வைப்பு தொகை ஆகிய வரியினங்கள் மற்றும் அபாயகரமானதும் அருவறுக்கத்தக்கதுமான (D&O) தொழில்களுக்கான கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கட்டிட உரிமம் அனுமதி அளித்தல், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குதல், அசையா சொத்துக்கள் குறித்த விவரம், தணிக்கை தடைகள் மற்றும் நகராட்சி கணக்குகள் புதிய மென்பொருள் (UTIS) மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>பொது :–</u>

அறிக்கையாண்டில் காஞ்சிபுரம் மாநகர பகுதிவாழ் மக்கள் மற்றும் வரி செலுத்துபவர்கள் அனைவருக்கும் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும், மாநகராட்சியின் நிதிநிலைக்கு ஏற்பவும், இதர திட்டங்கள் வாயிலாகவும், தரமான சாலை வசதி, தெரு விளக்குகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, வடிகால் வசதி, மழைநீர் சேமிப்பு வசதி செய்யப்படுவதுடன் ஆண்டுதோறும் சிறப்பான முறையில் மேற்படி வசதிகளை செய்து மக்கள் பயன் அடைய வேண்டும் என்ற குறிக்கோள் கடைபிடிக்கப்பட்டு மாநகராட்சி நிர்வாகம் செயல்பட்டு வருகிறது. நிர்வாகத்தில் நல் ஒத்துழைப்பு நல்கிய நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர்களுக்கு நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் இவ்வலுவலக பிரிவு அலுவலர்களாகிய நகராட்சி பொறியாளர், நகர் நல அலுவலர், நகரமைப்பு அலுவலர், மேலாளர், வருவாய் அலுவலர், மற்றும் அனைத்து அகப்பணியாளர் மற்றும் புறப் பணியாளர்கள் அனைவருக்கும் நிர்வாகத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆணையாளர்
காஞ்சிபுரம் மாநகராட்சி
12/12/2022

மாநகராட்சி அலுவலகம்,
காஞ்சிபுரம்.